




ஓலை 194| ஓசை 317| அக்டோபர் 2026

அகர முதல இலக்கியப் பேரவை



ஞானக்கூத்தன்

கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ம] சிவம் அறக்கட்டளை



திருக்குறள்

குறள்

வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற

பொருள்

ஒரு செயலை வெற்றிகரமாகச் செய்து முடிக்கத் தேவைப்படுவது ஒருவனுடைய மன உறுதிதான். மற்ற வசதிகள் எல்லாம் அதற்குப் பிறகுதான் வருகின்றன

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய

9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com



நிறுவனர்

செல்வமுத்துகுமரன்
குணசேகரசிவம்

ஆசிரியர்கள்

அ.வில்சன்
குமர.தர்மசீலன்

வடிவமைப்பு

ச.சூர்யா, அ.வில்சன்

அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

இனியொரு முறை..

பாவகை : சந்தம் உருவகப்பா

இனியொரு முறைநான் பிறந்திட வேண்டும்!
இனியொரு முறைநான் பற்று கொண்டு
துணிவுடன் சிரித்துப் பிறந்திட வேண்டும்!
அணியாய்த் தமிழை அணிந்திட வேண்டும்!

என்தாய் மடியில் தவழ்ந்திட வேண்டும்!
என்வாய் திறந்து தாலாட்டுப் பாடி
என்தாய் உறங்க உதவிட வேண்டும்!
இன்தமிழ் தாய்க்கே ஊட்டிட வேண்டும்!

அருந்தமிழ் பாலுடன் அன்னைப் பாலை
அமுதப் பாலாய் ஊட்டிட வேண்டும்!
வரும்படி எண்ணி வழித்தடு மாறும்
வையத் தார்க்கே விழியாய் இருப்பேன்!

என்விரல் பற்றி எந்தை நடக்க
எதிர்படும் எவரும் வியந்திட வேண்டும்!
நன்தமிழ் மறந்த ஆசிரியர் எழுதி
நற்றமிழ் கற்றிடச் செய்திட வேண்டும்!

கோவிலில் தமிழைக் கேட்டு மயங்கிட
கடவுளும் தமிழைத் கற்றிடச் செய்வேன்;
மேவிடும் யாவும் தமிழாய் மணக்க
மன்னர் மகனாய்ப் பிறந்திட வேண்டும்!

சட்ட நூலும் வழக்கு மன்றமும்
தமிழில் மிளிர மாற்றிட வேண்டும்!
கட்டுக் கட்டா யுள்ள பணத்தான்
கனித்தமிழ் மட்டும் மணந்திட வேண்டும்!





நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

பார்த்ததும் தோன்றும்
பகட்டின் எழுச்சியால்
ஆர்த்திடும் உள்ளத்தில்
ஆர்ப்பரிக்கும் ஓட்டத்தை
வார்த்தே சிறப்பாய்
வடிவமைத்தேக் காட்டலும்
ஈர்த்த கசப்பினை
ஈனத்தால் வருந்தியும்
ஊர்மன்றம் தன்னில்
உளைத்தே கழறலும்
ஓர்மமாய்க் கூறிட
ஓர்த்தே இயற்றலும்
கார்முகிலைக் கண்டதும்
கம்பீரமாய் யாத்திடச்
சார்வுடன் கோர்த்தலும் சால்பு.



கவிஞர் செ. கலைவாணி

முடிந்திட்ட பிறகு முனங்கலுமே எதற்கு
முன்னோட்டம் இன்றி முடிவொன்று தொடுத்து
வடியாத வலியும் வாழ்க்கையிலே இல்லை
வலிமையுடன் எழுந்து வழிசமைப்பாய் தொடர்ந்து
படித்திடவும் வேண்டும் பாடங்கள் முதலே
பயணிக்க வேண்டும் பயம்தெளிந்து அதிலே
கடினங்கள் எல்லாம் கட்டமைக்கத் தானே
கலங்காதே மனமே கடந்திடலாம் கண்ணே



கவிஞர் பூர்ணிமா சங்கர்

க. பாழ்மை பெருகி பிணியுறும் மக்கள்
அறமில்லா மன்னன் நிலம்.

உ. மனத்துயர் நீக்கும் மறையோர் அறவுரை
மாசில்லா மன்னன் உலகு

ங. அகமொன்றி இணையும் மனையறம் ஓங்கிடும்
மாறுபாடு அறுக்கும் உறவு.

ச. தெவ்வர் செருக்கு வீழ்த்தும் பகழி
திறவோன் ஈட்டிய பேறு.

ஞ. பெயல்நீர் தெளித்த பழனம் போல
பவளம் உதிர்த்த கடல்.



தென்னை

(சிறுவர் பாடல்)

தென்னை தென்னை தென்னை
விண்ணைத் தொடும் தென்னை
மண்ணில் வேரை ஊன்றியே
மக்கள் போற்றும் தென்னை!

இளநீர் தந்து தாகம் தீர்க்கும்
இனிய தேங்காய் ஈயும்
எண்ணெய் தந்து மேனி காக்கும்
என்றும் நன்மை செய்யும்!



ஓலை தந்து குடிலை வேயும்
ஓங்கி நிழலும் ஈயும்
நாரைத் தந்து கயிறு பின்னும்
நாளும் துணையாய் நிற்கும்!

மட்டை தந்து அடுப்பை மூட்டும்
மரமும் பலகை ஆகும்
தென்னை யாவும் பயன்கள் தந்து
தினமும் வாழ்வைக் காக்கும்!

தென்னை நாமும் நட்டுக் காப்போம்
தேசம் வளமாய் வாழும்
மண்ணின் செல்வம் தென்னை என்று
மகிழ்ந்து பாடுவோம் நாமே!

கவிஞர் நபீல் இப்னு இஸ்மாயில், நமடகஹவத்த (இலங்கை)

மூக்கு, முழிகள்
மழுங்கி நசுங்க அலமாரியில்
காட்சிப் பொருளாய் இருக்கும்
என் மகளின்
பழைய மரப்பாச்சி பொம்மை;
பிரசவத்திற்கு வந்திருக்கும்
மகளை நினைவில்
வைத்திருப்பது மட்டுமின்றி
அவளைப் பார்த்து
சிரிக்கவும் செய்கிறது.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

கரப்பான் பூச்சி

இருட்டும் மூலையும் என்றிருந்த கரப்பான் பூச்சிக்கு
வெளிச்சத்தை எட்டிப் பார்க்க வந்தது ஆசை.
வீசும் புகை நாற்றமும்
வேண்டா பூச்சிக்கொல்லியும் நாசியினை
மயக்கத்தில் ஆழ்த்த காற்றின் வீச்சில்
கண் விழித்துக் கொண்டது. கழிவறையிலும் குளியலறையிலும்
கேட்காத முழக்கங்கள்
அதன் காதுக்குள் கேட்கத் தொடங்கின.
வீதியில் ஊர்வலம் பேரணி வெற்றி முழக்கங்கள் என
அதன் பார்வைக்கு
ஆயிரமாயிரம் காட்சிகள். பசியின் சுரப்பு வேலை செய்ய
ஆகாரத்திற்கும் அளவு வைத்து ஆள்பவனைப் புகழ்ந்தபடி
கார்களின் ஊர்வலம் கிளம்பிற்று.
சொன்னதைப் படி ; என்னை மட்டும் புகழ்
தங்கமும் பெட்ரோலும் தவிர் என்றெல்லாம் எழுதியதை ஒப்பித்துவிட்டு
ஓய்வெடுக்கும் அதிகாரத்தை வேடிக்கை பார்க்கும்
கரப்பான் பூச்சிக்கும் நாற்காலிக் கனவுகள் வந்துவிட்டன.
மிதியடிகள் ஆண்ட நாற்காலியில் நாமும் இருப்போம் என
நகரத் தொடங்கியது.
தவளைகளையும் நண்டுகளையும்
பூச்சி புழுக்களையும் கூட்டணிக்குள் இழுத்துக்கொள்ள
கற்றுக் கொண்டிருக்கும் வித்தையில்
கரப்பான் பூச்சி இப்போது கடவுளாகிவிட்டது.



கவிஞர் இளையவன் சிவா

போரின் புகையால் பொழுதுகள் கருகினாலும்
புதிய விடியலை நம்புவோம்.

இழந்த உயிர்களின் நினைவுகளை
இதயத்தில் சுமந்தபடி
இனிய உலகை உருவாக்குவோம்.

வெறுப்பின் விதைகளை
வேரோடு களைந்துவிட்டு,
அன்பின் விதைகளை
அகிலமெங்கும் விதைப்போம்.



மதம், மொழி, இனம் என்ற
மனிதன் வரைந்த சுவர்களைத் தாண்டி,
மனிதம் என்ற ஒரே மொழியில்
மனங்களை இணைப்போம்.

கண்ணீரால் எழுதப்பட்ட
கடந்த காலப் பக்கங்களை
கனிவால் மூடிவைத்து,
கருணையால் நாளையை எழுதுவோம்.

ஆயுதங்கள் மௌனமாகட்டும்,
அகங்கள் பேசத் தொடங்கட்டும்;
புலம்பலைப் புறம்தள்ளி,
புன்னகையைப் பகிர்ந்திடுவோம்.

உலகம் முழுவதும் ஒரே குரலாய்
"போர் வேண்டாம்... அமைதி வேண்டும்!"
என்று மனிதம் முழங்கட்டும்;
அமைதியே நம் நிரந்தர வெற்றியாகட்டும்!

கவிஞர் இ. கேவர்மன், முல்லைத்தீவு (இலங்கை)

காத்திருப்பேன்



காத்திருப்பேன் உனக்கு
காலங்கள் கடந்து
நரைமுடி கண்ட போதும்
காத்திருப்பேன் உனக்கு!

காலங்கள் தந்திட்ட
கசப்பான வலிகள்
கற்றுத் தந்தது
இதுதான் வாழ்வென!

என் மூச்சு
உடலைவிட்டு போகும் வரை
காதலுடன் காலமெல்லாம்
காத்திருப்பேன் உனக்காக!

வலிகள் ஒன்றும் பெரிதல்ல
வலிக்கச் செய்தவர் யார்?
யாராக இருந்தாலும் தாங்கிட
யார் அவர் என நான் அறிந்த வேளை வலித்தது!

காத்திருப்பும் பாடம் புகட்டிடத் தவறவில்லை
பார்த்திருந்தேன் நீயும் வருவாயென
காத்திருப்பில் ஓர் உண்மை நிதர்சனமானது
பொறுமையும் மனிதனுக்கு அவசியம் என!

வாடகைக்கு எடுத்த உடம்பு
வாசலை விட்டு போகும் வரை
காத்திருப்பேன் உனக்கு!

உடலோடு வாழும்வரை
உயிரோ உடலை நினைப்பதில்லை
செல்லவேண்டிய தூ(நே)ரம் வந்ததும்
சொல்லும் கதைகள் பல
காத்திருப்பேன் கதைகள் கேட்டிட!

கவிஞர் திருமதி. ஜாவனிற்றா கிங்ஸ்லி, கல்முனை (இலங்கை)

ஒரு பெண்ணின் கனவு

அடுப்படி புகைக்குள்
முடங்கிட மறுத்தவள்
அகண்ட வானம் தொட துடிக்கும்
கனவு கண்டவள்

சமையல் பாத்திரம் மட்டுமல்ல
என் உலகம் என்றாள்
சாதனை படைக்கவே பிறந்தவள்
நான் என்றாள்

முந்தானை முடிச்சில் முடங்காது
என் எதிர்காலம்
முழு நிலவாய் ஒளிர்வதே எனது இலக்கு
அழுகைக்கு மட்டுமே பிறந்தவள்



இல்லை நான்
ஆளுமை கொண்டு உயர்ந்திட பிறந்தவள்
என் சிறகுகளை வெட்டி விடாதீர்கள்
என் வானத்தை எனக்கு தந்து விடுங்கள்

நான் படிக்க வேண்டும்
நான் உழைக்க வேண்டும்
நான் எனக்காக வாழ வேண்டும்

என் கனவு பெரிது
என் நம்பிக்கை
அதை விட பெரிது
ஒரு நாள் வெல்வேன்
என்பதே என் கனவு

கவிஞர் நஸ்ரினா, குருனாகல் (இலங்கை)

அக்கறையாய் கருவறையில்
அனுதினமும் காத்திட்டவள்
ஆகாரம் உண்டு நமக்கு
ஆரோக்கியம் தந்தவள்

இதயம் கனிந்து
இதமாய் அரவணைத்தவள்
ஈரைந்து மாதங்களாய்
ஈகையுடன் இருந்திட்டவள்

உதிரத்தை பாலாக்கி
உன்னதமாய் அமுதூட்டியவள்
ஊனுறக்கம் மறந்து
ஊக்கத்தை வளர்த்தவள்



எளிமைதனை நாள்தோறும்
எடுத்துரைத்த தாயவள்
ஏற்றத்தை வாழ்வுதனில்
ஏணியாய் இருந்து உயர்த்திட்டவள்

ஐயமதை போக்கியே
ஐக்கியமான அன்னையவள்
ஒற்றுமையை கற்றுத்தந்து
ஒருமைப்பாட்டை வளர்த்தவள்

ஓயாத உழைப்பால்
ஓய்ந்திடாத அம்மா
ஔடதம் தந்து
பிணிதனைப் போக்கியவள்

கண்ணின் இமையாய்
கருத்தான பந்தமிவள்
கானமிசைத்து மகிழ்வூட்டிய
கானகத்து குயிலிவள்

கிஞ்சித்தும் கடுஞ்சொல்லால்
மனதினை வருத்தாதவள்
கீழ்திசை ஒளியாய்
கீழ்வானத்தின் சிவப்பானவளே

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

புலம்பி என்ன ஆகப் போகிறது?
மற்றொரு பூமி பிறக்கப் போகிறதா?
கிழக்கினில் முளைத்து மேற்கில் மறைபவன்
வடக்கினில் உதித்து தெற்கினில் தேயப் போகிறானா?



உலகினை மாற்றும் சக்தி
உன்னிலிருந்தே தொடங்கும்!
உன்னை மாற்றிக் கொள்!
உலகம் தானே மாறும்!

கணந்தோறும் மாறும் இவ்வுலகில்
தினந்தோறும் ஆயிரம் மாற்றம்!
உன் கவலைகள் யாவும் தீரும்
நிலையும் சட்டென மாறும்!

ஏழு கடல் ஏழு மலை தாண்டி வைத்தாலும்
கிளியின் விதி மாறுமோ?
கிளைகள் மாறி மரங்கள் தாவி
அடவியில் வாழும் உயிர்க்கு அச்சம் உதவுமோ?

ஆயிரம் சோதனை ஆயிரம் வேதனை
அனைத்தும் உன்னை புடம் போடும்!
புதிதாய் பிறந்து புதிதாய் சிரி!
நேற்றைய கவலையை தூர எறி!

இரும்பை துரு அழிப்பது போல
இருப்பை கவலைகள் தின்னக் கூடும்!
கவலைகளை ஓடவிடு!
காலனை தெறிக்க விடு!

ஒரு பிறவி? ஒரு வாழ்க்கை!
உன் சிரிப்பினால் எதிரிக்கு தீ மூட்டு!
இதழ்க் கோடி நகை உதிர்த்து வதம் செய்!
நித்தம் ஒரு விதி செய்

கவலையை வாசலில் செருப்போடு வை!
புலம்பலுக்கு இன்றோடு நெருப்பை வை!
இன்பத்தை விழையாதான் வாழ்வு
துன்பத்தில் துவளுவதில்லை!

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு, திருச்சி

துன்பத்தில் உள்ளாரைத் தூக்கிவிட தனையீயத்
தன்னுள்ளே எண்ணுவார் தன்மையால் மனிதம்
முன்னிற்பார் நாளுமே முடித்திடவே நல்வினை
அன்பொன்றே காரணம் அதனால்தான் மனிதம்!

பிரித்தெதும் பார்க்காது பிறருக்காய் எண்ணும்
புரிந்துணர்வு கொண்டோர் புனிதர்தாம் உலகில்!
அருகம்புல் வேராய் அகலாது மனிதந்தான்
அருகவில்லை இன்னும் அம்மனிதம் வாழ்க!



கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி

கம்பராமாயணத்தில்
இராமன் சொல்கிறான்
"குகனோடு ஐவர் ஆனோம்"என்று
சுக்ரீவனோடு நட்பில் சேர்கிறான் இராமபிரான்.

மகாபாரதத்தில்
கர்ணன் நட்பு இறுக்கம் துரியோதனன்.
உன் நண்பன் யார் என கூறு
நீ யார் என்று சொல்கிறேன்

நட்பு அற்புதமான அன்பின் இழை நூல்.
நூலை பக்குவமாக நெய்தால்
ஆடை அருமையாக அமையும்.

கண்ணனும் குசேலனும் நட்புக்கு
தெய்வீக உதாரணம்!
மனிதப் பிறவியில்
உயர்ந்த நிலையில் நட்பின் விலை!

மனம் சோர்ந்து
மதி மழுங்கும் போதில்
நல்ல அறிவு புகட்டி
அணைக்கும் நண்பனுக்கு ஏது இணை?

தோள் கொடுக்கும் தோழன் என்றைக்கும்
நெஞ்சம் நிறைந்தவன்.
உற்றார் உறவினரிடம் சொல்ல முடியாமல்
திணறும் உள்ளத்தின் வேதனைகளை

வெட்கமின்றி சொல்லிக் கொள்ள
நண்பன் அவசியம்.
நல்ல நண்பன் தலையாட்டி பொம்மை அல்ல



தவறி விழாமல் நெறி தவறாத வண்ணம்
கூட நின்று காக்கும் பொறுப்புடன்
சிறந்த நண்பன்.
மணிமேகலையின் உற்ற தோழி சுதமதி.
பெயருக்கு ஏற்ற குணம் நிரம்பியவள்.

நல்ல நண்பன் கிட்டவும்
நல்லவர் நட்பு கொள்ளவும்
பெரும் பாக்கியம் செய்திடல் வேண்டும்.

கவிஞர் விஜயலட்சுமி கண்ணன், அம்மாபேட்டை

மனிதனின் பேராசையால்
இயற்கையின் இதயம்
மாரடைப்பில் அபாயகரமாய்

இயற்கையை இடிபாடுகளில்
தொலைத்த மனிதனால்
காலநிலை சூறாவளியாய்

மழை மறந்த நாட்கள்
வெயிலின் வெப்பத்தில்
தகிக்கும் தணல்களாய்

சாரலாய் பெய்த மழை
துளிகள் மனிதகுலம்
அழிக்கும் கோபங்களாய்

காடுகள் எல்லாம்
விடுதிகளின் முகங்களாய்
மாற இயற்கை இயலாமையாய்

வணிகமயமாக்கபட்ட இன்றைய
காலத்தில் இயற்கை
அழிக்கப்பட்டு வேதனைகளாய்

காலநிலை மாறுபாட்டால்
எதிர்காலம் ஏக்கங்களின்
முகவரிகளாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

மாமனே
உனை இழந்து தவிக்கிறேன்.

தவிப்பைவிட நினைவுகள்
நிர்மூலம் ஆக்குகிறதே.

நாம் நம்முடைய என்ற
வாக்கியமெல்லாம் சுயநலமாகிபோனதேனோ.
நான் எனது என்று.



நாம் பேசிய இடங்கள்
நாம் சுற்றிய இடங்கள்
நாம் கண்ட கனவுகள்.
நாம் பகிர்ந்த பேச்சுக்கள்
எல்லாம் கானல் நீராய்
போனதேனோ மாமா.

நீ இல்லாமல் வாழ்கிறேன்.
வாழ்க்கையில் பிடித்தமின்றி.
நதிபோல் வளைந்து நெளிந்து
போனோம்.

இப்போதோ

ஏங்கி போனதுடன்
தேங்கி போனேனே.
கடலில் நீ கரைந்ததால்.



போதும் நிறுத்தி விடுங்கள்

எங்கெங்கும் ஒரே இரைச்சல்,
மெல்லிசையின் மௌனங்கள்!
சொல்லொணாத் துயரங்கள்,
கண்களுக்குள் மெதுவான பனித்திரை!

மக்களின் இன்னல்கள்,
சின்னப்பிள்ளைகளின் ஏமாற்றக் கனவுகள்!
விடலைப்பருவத்து வாலிபர்கள்,
வயது போன முதியவர்கள்!

துப்பாக்கிச் சூட்டொலிக்கு ஏமாறும்
சின்ன சின்ன வண்டுகளின் இரைச்சல்,
வேண்டாம் இனியும் தாங்க முடியவில்லை!

மண்ணில் பிறந்து விட்ட எவருக்கும்
மாயக்கனவுகள் வேண்டாமே!
மழலைச் சத்தங்கள் உயிர் பெற்று எழும்பட்டும்!

மனசுக்குள் ஏங்கும் ஏக்கங்களுக்கு
மருந்தாகிப் போனால் போதும்!
நிறுத்தி விடுங்கள்
பீரங்கிகளின் சத்தம் காதைக் கிழிக்கிறது!

வாழும் காலங்கள் யாவும்
பொன்னான காலங்களாக மாறட்டும்.
மானிடர்கள் தலை நிமிர்ந்து நடக்கட்டும்!
நிறுத்தி விடுங்கள்
ஏவுகணைகளின் இறுமாப்பினை!

புத்தகங்களை சுமக்க வேண்டிய கைகள் - இன்று,
பெற்றவர்களை இழந்து,
அவர்களின் அசைவற்ற உடல்களை
சுமந்து செல்லும் காட்சி,
நெஞ்சத்தின் ஓரத்தில் நெருடலைக் கொடுக்கிறது!



போதும்... இனியும் வேண்டாம்
நிறுத்தி விடுங்கள் போரினை,
போராட்டங்கள் பூங்கொத்தாக மாறட்டும்!

கவிஞர் அக்பர் ஜனுல் முன்சிலா, மருதமுனை

மெல்லிதழ் செவ்வாய் இயற்கையின் கவிதை
மலரம்புகள் தொடுக்கும் வண்டினக் கூட்டம்
நறுமணம் சிதறடித்து ஆடும் பூம்பாவை
தென்றலின் தாலாட்டில் தலை ஆட்டிடும்
அமைதியான பூஞ்சோலையின் அழகிய மென்மை
இதழ் அடுக்கிய வாசமிகு கோபுரம்
முட்களின் முத்தத்தில் மலர்ந்த மோகனம்
பனித்துளிச் சூடியவள ஒளிக்கீற்று
அழகின் அரியணை ஏறிய அரசகுமாரி
மலர்களின் அரசி அவள் என்னவள்



கவிஞர் சுகுமாரி சுந்தரராஜன், விருதுநகர்

தனிமையின் புதிர்
மொழியியல் இல்லாத கதிர்
உடல் மொழி ஆணவம்
அன்று காண கிடைக்காத சாதனம்
தூக்கி எறியப்படாத வாழ்க்கை
தினம் ஒரு மன தூண்டல்
தேடலின் ஆவணம் தொடரும் மனம்
புதிய வார்ப்புகள் வழக்கமில்லாமல்
நாவாய் நாளும் துடிதுடிக்க
எதையோ உடன் குமிழ்கிறது
காணும் இடமெல்லாம் மீண்டும் தொடராமல்
வந்தவர்கள் சென்றவர்கள் எழுதப்படாமல்
கற்றலும் கற்பித்தலும் காலம் முழுவதும்
கடன் வாங்காமல் தொடர்கிறது
யாரோ யாரிடமும்
எதைத் தேடுகிறது எதற்காக
அதை நாடுகிறது இரக்கமில்லாமல்
ஏனோ வாழ்க்கை அறிவும் அறிவாளியும்
ஒன்றுபடாமல் திட்டப்படாத புது மொழியாக
மனிதர்கள் அனைத்தையும் ஆட்கொள்கிறார்கள்
அழிவென்று அறிந்தும்
ஆம்
சேகரித்த நினைவுகள் மட்டும் தொடர்கிறது
என் பயணங்களாக!



கவிஞர் ம. செல்லா, நூத்தப்பூர்

மண்ணில் உதித்த மட்டில்லா வுயிர்களில்
வெண்ணிலா வடிவாய் விருந்தாய்க் கிடைத்தவரே
குழந்தைப் பிறப்பில் குழுவின் மனதாய்
எழுப்புமே யோசையும் என்றும் மறவாமல்

தந்தைக்கு அரவணைப்பு தாய்க்கு உதவியாய்
விந்தைப் புரிந்திடும் விழுதின் ஆலாமே
அன்பின் பெருக்கில் அமைதியின் சிகரமாய்
துன்பம் வருகையில் துயரமும் துடைப்பவரே



சலிப்பாய் வருகையில் சலனமின்றி அணைக்கும்
நலிந்த நேரத்தில் நளினமான வார்த்தையாலே
சோர்வைப் போக்கிடவே சோலையாய் மிளிரும்
போர்வைப் பாதுகாப்பாய் தோளான நிறைவே

மகனின் அன்பை மட்டில்லா விஞ்சிடும்
சுகமான உறவின் சுகந்த நல்லுள்ளமே
பெற்றோர் நலிவிலே பெரும்பங்கு பாதுகாப்பாய்
வெற்றியாய்க் காத்திடும் வெளிப்படை நட்பே

சகோதரப் பாசத்தில் சல்லியின் வேராய்
மகத்துவம் புரிந்திடும் மட்டில்லாத் தங்கமே
வருங்காலம் யோசிக்கும் வாழையின் குருத்தாய்
பெருமையில் நிலைத்த பெருங்குண வுள்ளமே

உதவியைச் செய்வதில் உறுதுணையாய் அருகிலே
கதம்பமாய் மணக்கும் கற்பூரத் தன்மையே
வேலைகள் பகிர்ந்தெடுத்து வெற்றியைக் கொடுக்கும்
நாளைய வசந்தத்தின் நல்லுள்ளச் செல்வம்தானே

படிப்போடு இணைந்து பண்பட்ட வேலைகளை
துடிப்பாகச் செய்யும் துணையான பாசமே
நெடியத் தூரமும் நேசமாய் வந்திடும்
படிக்கல்லாய் விளங்கிடும் பணிவான குணம்தானே

கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

சுட்டகனி தின்ற ஔவையார்
பட்டினப்பாலை கவிதை வரிகள்
உழன்றும் உழவேதலை என்ற
வள்ளுவரின் குறளமுதம்

எல்லாமே தமிழரின் பயிரியல்
அறிவுக்கு காலத்தின் சாட்சிகள்
நிலமும் நீரும் நெருப்பும் பண்டய
நாகரிக பரிமாண சாட்சிகளே

கருப்புக் கழியொன்றில் வெள்ளி
பூண்மாட்டி உலக்கை என்றனர்
பாக்கம் என்றும் தோட்டமென்றும்
பகுதி விகுதி என்று பிரித்தனர்

அங்கே பலஏரிகள் கண்மாய்கள்
குளம் நீர்நிலைகள்இருந்தன
இன்று கட்டிடங்களின் காடாகி
பெயர்மட்டும் காலத்தின் சாட்சி

பற்பல ஆலயங்கள் சிதிலமாகி
பூசையில்லாத காலத்தின் சாட்சி
பதினைந்தாம் நூற்றாண்டில்
விசயநகரப் பேரரசு இருந்தது

தூத்துக்குடி அருகே செய்துங்க
நல்லூர் பாண்டுரங்க விட்டல்
கோவில் கல்வெட்டு போலபல
கல்வெட்டுகள் காலத்தின் சாட்சி

விச்னோய் சமூகம் ராஜஸ்தான்
தார் பாலைவனப் பகுதியில்
நாடுஅல்ல காடுகளைக் காத்திட
இயற்கை எழில் நீர்நிலை காக்க



நூற்றுக்கணக்கில் பலியானதன்
நினைவு காலத்தின் சாட்சிகளே
கீழடிபோன்ற பலதொல் புதை
ஆராய்ச்சிகள் காலத்தின் சாட்சி

இன்னு முண்டு இயம்புவதற்கு
ஏராளமாய் இதிகாசங்களில் கூட

கவிஞர் கி.சுப்பிரமணியன், அடையார்

எதுவுமே பாதிப்பு ஏற்படுத்தவில்லை
எதுவுமே காயங்கள் தரவில்லை
எல்லாமே ஒரு அமைதியின் ஒழுக்கில்
எங்கெங்கும் மெல்லிய சாந்தம்

பொறாமை எனும் உலகத்தில் இருந்து
உன்னை விடுவித்துக் கொள்கிறாய்
பெருமௌனம் குடியிக்கும்
பேரிறை நாதத்தை முழக்கமிடுகிறாய்

எந்த ஒரு சிறு ஒரு உரசலிலும்
தீப்பற்றிக் கொள்ளும் உள்ளம்
தற்போது
தாழ்ந்து தொய்ந்து ஈரலித்த பஞ்சாய்
அடங்கி ஆரவாரமற்று

இறைவனின் அற்புதங்கள்
இப்படியும் நிகழலாம்
தோற்றப்போலியாய் நீயும் வாழலாம்.

நின் பிறப்பின் நோக்கம் உணர்ந்து
நேசத்தின் விலாசம் நோக்கி ஊர்ந்து
எப்போதுமே நீ ஏகனின் அடிமையாய்!



கவிஞர் ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

சொற்களின் நோவுகளை
தூரி பிடித்துக் கொண்டு
என்னுள் சன்னம்மாய் ஆடிக்கடந்தது
அவன் வாராத நாட்கள்!

ஊரை மறந்து
உறவைத் துறந்து
உடன் போக்கில் தானே நாம் ஒன்றானோம்!

திரைகடல் கடந்து
திரவியம் தேடும் வழியை மட்டும்
உன்னுள் வழமையாய் கொண்டதேன்?

குதித்தும் கொப்பளித்தும்
வெண்ணுரை பூசிய
கட்டறுந்த காளங்கன்றாய்
வறண்ட நிலமனைக்கும் பரவசத்தில்
இருகத் தழுவி
பிறவிப் பயன் போக்கும்
பேரின்ப சங்கமத்தில்
கதிர்முற்றிக் காய்ந்து கிடந்த
நம் வாழ்வென்னும் பெரும் நிலத்தின்வாசம்
உன் காது மடல் தீண்டவில்லையா?

வறண்ட வானமும்
சுருண்ட நிலமும்
அதன் கருப்பையை நிரப்ப
ஏரும் போருமாய் எந்நாளும் உழலும்
உழுகுடி மாந்தன் அடிக்கும் உடுக்கைச் சத்தத்தில்
சித்திரை பெருவிழாவின் காப்புக்கட்டுதலுக்குள்
சுருக்காய் வருவதென
நீ சொன்ன சொல் நினைவில்லையா?

நீ உதிர்த்த சொற்கள்
நிலம் சுமந்த நெல் மணியாய்
என் நெஞ்சில் எழுந்து
நாற்றாங்காலாய் நிற்பதை



எப்படி மறந்தாய்
என் ஆசை மச்சானே?

முனை மழுங்கிய கோடாரிகளாய்
என் காதுமடல் கிழித்துக்கொண்டு
தினமும் இறங்குகிறது
ஊரார்ின் ஏச்சுகள்!

நிறைபானைச்சோறில்
கருவாட்டுக் குழம்பும் பிசைஞ்சு
உன் திசை தேடி
நான் அனுப்பிய வாசம்
உன் இரைப்பை நிரப்பி
என் உயிரின் துடிப்பை
உன்னுள் உணர்த்த வில்லையா?

நீயும் நானும் மட்டுமே கடந்துவந்த
பாதையின் சுவடுகளாய்
பெரு நிலத்தின் வறண்ட கோடுகளில் தாங்கி
வாராத மழை வருமென்று எண்ணியே
வானோக்கி பார்த்திருக்கிறாள்
என்போல் அந்த நிலமென்னும் நல்லாள்!

கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

சில துளிகள் மழை பெய்தால் கூட
வந்துவிடுகின்றன
எங்கிருந்தோ தவளைக் குஞ்சுகள்.

கூட்டமாக அவை
குதித்துத் தாவுகின்றன.
கும்மாளமிடுகின்றன.

சிறிய முன்னங்கால்களால்
உடலைத் தாங்கும்
அவற்றின் மகிழ்வுக் கெல்லையில்லை.

பழுப்பு நிறப் புள்ளிகளாய்
பாய்ந்து பாய்ந்து செல்லும்.



வாய்க்கால் மழைநீரில்
வளைந்து வளைந்து செல்லும்
வட்டமிடும் படகுகள்.

ஓடுகின்றன ஓடுகின்றன
வாழ்வின் எல்லை நோக்கி.

பார்க்கும் கண்களில்
பசுமையும் பதற்றமும்
பதுங்கிக் கொள்கின்றன.

கவிஞர் வளவ. துரையன், முகலிவாக்கம்

பூமிக்கு மலை அழகு
பூக்களுக்கு நிறம் அழகு
தொழிலாளர்க்கு திறமை அழகு
கோடையில் மழை அழகு

மழை காலத்தில் இளம்வெயில் அழகு
மனிதனுக்கு மனித நேயம் அழகு
இறைவனுக்கு பக்தர்கள் அழகு
நல்லோர்க்கு கள்ளமற்ற உள்ளம் அழகு

இந்தியருக்கு தேச ஒற்றுமை அழகு
உலகிற்கு சாதி சமயமற்ற இதயம் அழகு
ஈகைகுணம் செல்வந்தர்க்கு அழகு
நல்ல தலைவன் நாட்டிற்கு அழகு

மனிதனுக்கு நல்ல மனம் அழகு
பெண்ணிற்கு புன்னகை அழகு
அறிவுடையோருக்கு கல்வி அழகு
பணிவோடு இருக்கும் பண்பு அழகு

தேர்தலுக்கு நேர்மை அழகு
பண்பாடுகளால் தமிழ்நாடு அழகு
போர் இல்லா அமைதியான வாழ்க்கை
உலகத்திற்கு அழகு!



கவிஞர் லலிதா ஷ்யாம்

அந்த நாள் வாழ்வுதான் அமுதமாய் இருந்ததே
உறவோடு ஒன்றியே வாழ்ந்திட்ட காலம்தான்
மகிழ்ச்சி எல்லையை தொட்டிட காலம்தான்.

ஊரோடு ஒன்றுகூடி தேர் இழுத்த காலமும்
கோயில் திருவிழா திருமணம் என
கூடிய மகிழ்ந்திட்ட குணமான காலங்கள்
தேனின் சுவையாக தெவிட்டாத நாட்கள்தான்.

ஆறு குளம் ஏரியென மீன் குஞ்சாய் நீச்சல் அடித்து
கபடி கிட்டிப்புள் நொண்டி என
புழுதியோடு மல்லுக்கட்டி விளையாடிய
காலமெல்லாம் கனவாய் போச்சே.



சில்லறை நாணயங்கள் பாக்கெட்டில் இருந்திட்டால்
"டாட்டா பிர்லாவாய் " ராஜ நடை போட்டிட்ட
அந்த நாள் வாழ்வு தான்
நினைத்திட நினைத்திட நெஞ்சம் நெகிழ்கிறதே.

மாசு இல்லா காற்றை ஊருக்கே வழங்கி
அடையாளமாய் விளங்கிட்ட
ஆலமரம் அரசமரம் மாமரத்தில் ஊஞ்சல் கட்டி
வானத்தைத் தொட்டிடும் நினைவோடு ஆடிய
அந்த நாள் வாழ்வுகள் கனவாய் போனதே.

அரை ரூபாய் நாணயத்தில் வாழ்வியலோடு கலந்திட்ட
உறவைப் போற்றியே நல்ல தமிழ் வளர்த்திட்ட
ஆன்மீகம் சமூகமென அறம் வளர்த்த
"திரைப்படங்கள்" இந்த கால தலைமுறைக்கு
கிடைக்காத அற்புதம்தான்.

இயற்கையோடு இணைந்தே வாழும் காலம் என்றுமே
நோய் நொடியின்றியே வாழும் காலம் வளமையே
வரும் தலைமுறைக்கும் சொர்க்கமே..!

கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

நினைவுகளின்
அலைவரிசையில்
நீண்ட தூரம் சென்ற பிறகு
உதட்டின் ஓரம்
ஒரு
புன்னகை மலர்வதற்கு
காரணமாவது
பயனற்ற
முட்டாள்தனமான
ஏதாவதொரு
சந்தோசமே



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்

மனம் சொல்லும்
மண்டல வழிகளிலோ?
மாணிக்கமோ கல்லோ
நானிலம் தேடட்டுமே?

எந்த மனிதனும்
எந்திரம் இல்லையே.
இலட்சியத்தின் விந்தையின்
நாகரீகமோ சொல்லவோ?

மமதையின்றி மாபெரும்
சபையில் இரணகளமாய்.
மூன்றாம் சாமமும் அறிந்திருந்த
சாமக்கோழியாய்.

மாறுவேடம் போடும்
முகமூடி உலகமோ?
பேராற்றல் படைத்தவனை
அடையாளம் காணலாம்.

நேரிய மனமுண்ட
சாமானியனையும் தேடுமோ?
நேசங்களின் உயர்வோடு
உலகை அறிவதுண்டோ ?

ஏற்பதும் இகழ்வதும்
உலகே செய்யட்டுமே!
ஏளனமாய் பார்க்கும்
ஏக்கங்கள் தீருமோ?



பாருலகும் பார்க்கும்
வண்ணம் திசை திருப்புதலோ?
ஏற்றங்களும் இறக்கங்களும்
ஏந்திய வாழ்வில் என்றுமே
பள்ளத்தாக்குகளோ?

மனிதனைத் தேடுமுலகம்
மனிதத்தை தேடிட முயலட்டுமே!?

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

உள்ளங்களில் உஷ்ணம் விழிக்கும்
உள்ளங்கால்த் தொடும் காற்று
சுள்ளென ஊசிமுனையில் பேசும்
வெண்மதி விழியில் வெட்கம் சிந்த,
கண்ணிமை மூடும் கற்பனை திறக்கும்
காலம் குளிரில் கரைந்து வடிய
கனவுகள் இல்லா கண்கள் சிவக்கும்
வானம் மௌனத்தில் வார்த்தை வடிக்க
பனித்துளி இலைகளில் பரதம் கற்கும்
நினைவுகள் நிசப்தத்தில் நனைந்து கிடக்க
நிலத்தின் மூச்சு மெல்ல கிறங்கும்

நிற்காத பனிப்பூத் தூவலில்



கவிஞர் ஜமுனா ஜெகன், நாகர்கோவில்

அகிம்சை என்னும் ஆயுதம் ஏந்தி
அடிமைத் தளைகளை அறுத்தவர் நீரே!



சத்திய சோதனைக் கதைகள் தந்து
சமத்துவக் கொள்கையைச் விதைத்தவர் நீரே!

நூலினை நூற்று நுதலிய வாழ்வில்
நேர்மை ஒளியைக் காட்டிய மாமனிதர்!

காலடித் தடத்தில் உலகமே நடக்க
காந்தியக் கொள்கையின் சொந்தக்காரர்!

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாமல்
உண்மையே கடவுள் என வாழ்ந்து காட்டியவர்!

வெள்ளையர் ஆட்சியை வேரோடு சாய்க்க
வெப்பமில்லாப் புன்னகையைக் கவசமாய் கொண்டவர்!

இன்றைய உலகில் அமைதி தவழ
இறைவனின் தூதனாய் உதித்தவர் நீரே!

பொய்களை வென்ற புண்ணியச் சீலனே
போற்றுகிறோம் உன்னை இந்த நாளினிலே!

கவிஞர் சே. மு. அஸ்மீத், திருகோணமலை, கிண்ணியா

ஊர் மக்களின் பணம்
சாக்கடையில் சிலை கரைப்பு
பயனற்று போனது
எளிய மக்களின் உழைப்பு



கயல் விழியே
நீயில்லை என் அருகில்,
என்றான போதும்

கண் விழியின்
அசைவில் எல்லாம்
உன் முகமே தெரிகிறதே.

உலகின் விளிம்பிலே
எங்கோ நீ இருக்க,
என் விடியல் எல்லாமும்
உனக்காக விடிகிறதே.

நீ பார்த்த அந்த நிமிடம்
என் உலகமே
அசையாமல் நின்றது
சில தருணம்.



உன் பார்வையில்
விழுந்த இதயம்
காண்கிறது தினம் தினம்
சுகமான மரணம்.

என்ன கொடுத்து
என்னை எடுத்தாய்?
எதை கொடுத்து
இனி - என்னை நான்
மீட்டெடுப்பேன்.

முற்றத்து நிலாவும்
நித்தமும் என்னோடு
சண்டையிட்டு
போகுதடி.

இளைய நிலவே,
உன்னை
கூட்டி வந்து காட்டச் சொல்லி.

கவிஞர் க. கார்த்திகா மணிகண்டன், கோவை

வெற்றிக்கு தோல்வியா தலைமை தாங்குவது?
அறிவுக்கு அறியாமையா தலைமை தாங்குவது?
கடலுக்கு கண்மாயா தலைமை தாங்குவது?
வெளிச்சத்திற்கு இருளா தலைமை தாங்குவது?
மின்னலுக்கு மின்மினியா தலைமை தாங்குவது?
கண்ணியத்திற்கு கர்வமா தலைமை தாங்குவது?
அடக்கத்திற்கு அகம்பாவமா தலைமை தாங்குவது?

இளைஞனே! நீ சிங்கம்!
உனக்கு தடை என்ற
சிறு நரியா தலைமை தாங்குவது?
காரியம் கெட்டுவிடும்.
காலம் கைகொட்டி சிரித்துவிடும்.
உன் முன்னேற்றத்திற்கு
முயற்சி தலைமை தாங்கட்டும்.
உன் வார்த்தைகளுக்கு
வாய்மை தலைமை தாங்கட்டும்.



நம்பிக்கை சொற்களால் கவிதைகள் படைத்து
நன்மையை நாட்டிற்கு பந்திவைப்பவன்நீ
திடம் கொண்ட தோள்களால்
வெற்றியின் தடம்பதிக்கும் வீரம் நீ.
வறுமையை வழி அனுப்பிவிட்டு
வசதியை வரவேற்கும் உழைப்பின் சிறப்புநீ
வசந்தகாலத்தின் பூபாளம்நீ
இலையுதிர்காலத்தின் முகாரி உனக்கு எதற்கு ?
தலைமை தாங்கு தரணியை வாங்கு

தனிமை போர்வைக்குள் முடங்கிய
தருணமது
சுழற்ற மறந்தன விழிகளும்
வேம்பெனவே

அன்பென்ற மாயக்குகைக்குள்
மாட்டிய மானாய்
சோம்பித் திரியவில்லை ஓடும்
ஓட்டத்தில்

ஒன்றுமறியாமலே நெடுந்தூரப்
பயணத்தில் திருதிருத்து
பயம் சூடியப் பொழுதுகள்
பக்குவமில்லாத பதட்டம்

தேடலில்லாத உலகமதில்
தொலைத்த முகங்கள்
பொத்திய சிறகுப்போல் மடங்கிய
மனமும்

பொன்னான காலங்களை
புரியாமல் தள்ளியே
அறியாமலே அசைவின்றியே
மனதின் வரிவடிவங்கள்

நேசமான வாசிப்பால் நெருங்கிய
தோளணைப்புகள்
தட்டியெழுப்பிய தாகம் தீர்த்திடும்
நீரலைப்போல்

வண்ணம் தீட்டினேன்
வான்முகிலின் முகவரியால்
சுழன்ற அம்பகம் விரிந்தனவே
பேரின்பத்தில்



துள்ளிடும் கனவை அள்ளி அணைத்திடவும்
தொடரந்த வாசிப்பின் பாதையில்
வைகறையின் வாசம்

வசந்தத்தின் வண்ணங்களை
நிரப்புகிறேன் நிதமும்
கனவு மெய்ப்பட்டு நானும்
கவிமொழியகத்தில்

பொக்கிஷமான நேரத்தை
விரயமாக்க விடுவேனோ
கவிதைப்பூக்கள் மலர்கின்றன
கவிமுற்றத்தின் வாசலில்

கவிஞர் சுந்தரி பாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டினம்)

அடிமைத் தளையறுக்க
அந்நியனை வெளியேற்ற
அகிம்சை என்னும்
ஆயுதத்தைக்
கையில் எடுத்த ஆத்மா
எங்கள் மகாத்மா.

அரை வயிற்றுக்
கஞ்சிக்கு அல்லல்படும்
மக்களைக் கண்டு
ஆடம்பரத்தை வெறுத்து
அரையாடை அணிந்தவர்.

தண்டியிலே உப்பை அள்ளி
ஆங்கிலேயரை
மண்டியிட வைத்தவர்.
அறநெறியைத் தவறாது
கடைபிடித்த அண்ணல்.

நேசத்தினாலே அனைவருக்கும்
தேசப்பிதா ஆனவர்.
மௌனப் புரட்சியிலே
மகத்தான வெற்றி கண்டவர்.

அணுஆயுதங்களை விட
அகிம்சையிலே
அகிலத்தை வெல்லலாம்
என்றுரைத்த
அண்ணலின் கொள்கையினை
பின்பற்றுவோம்
பிதாவின் பாதையிலே
சென்றிடுவோம்.



கவிஞர் விஜயலக்ஷ்மி காளிதாசன், பொள்ளாச்சி

ஒரு
தனிமையின்
அமைதியை
நேர்த்தியான
உரையாடலாக
மாற்றிவிடுகிறது
புத்தகம்



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்

நீலக் கடலின் நெஞ்சில் தவழும்
அலைகளே! நீங்கள் உண்மையைக் கூறுங்கள்!
அடிவானத்தை ஒருபோதும் தொட்டதில்லை என்றாலும்
தொடுவதாய்த் தெரிகிறது எங்களின் கண்களுக்கு!
கதிரும், நிலவும் காலை மாலைகளில்
விதவிதமாய் வண்ணங்களை வாரிக்கு வழங்கிடுதே!
தங்கமும் வெள்ளியுமாய் மின்னிடுதே மேனியெங்கும்!
காற்றுடன் கரம் கோர்த்து நாட்டியம்
ஆடியபடி ஓடிவருகிறாய் கரை நோக்கி!
ஆர்ப்பரிப்பு காண்கையில் நெஞ்சினில் பூரிப்பு!
கரையைத் தழுவி மீண்டும் கடலுள்
சேர்வதில், ஒவ்வொரு முறையும் நீங்கள்
உரைப்ப தெல்லாம் கவிஞனுக்குக் கவிதைகள்!
தடைகளைத் தகர்த்து தாண்டிச் செல்லென
விடையளிக் கின்றாயோ உடைந்த மானிடர்க்கு!
நாள்முழுதும் ஓயாமல் நாட்டியம் ஆடியே
எல்லோர்க்கும் ஏதோ ஒன்றைச் சொல்லிச்
செல்கின்றாய்! பொங்கி எழுந்து புறப்பட்டாலோ
உள்ளிழுத்துச் சென்று ஊரையே மறைக்கின்றாய்!
வரையிலாப் பயணம்! வானம்தொட முயற்சி!
அடிவானம் தொட முயலும் அலைகள்போல்
முடியும்வரை முயற்சிப்போம்! வானமே எல்லையென!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

நானும்

இருபத்தி எட்டு ஆண்டுகள்
சனிப் பின்னிரவில்
இல்லம் வருவதும்
ஞாயிற்றுப் பின்னிரவில்
இல்லத்திலிருந்து
கிளம்புவதும்
இடைப்பட்ட நேரத்தில்
பெரும்பாலும்
வீட்டிலேயே இருப்பதும்.

வார இறுதி நாளிலும்
ஊர்த் திருவிழாவிலும்
இறைவனைத் தரிசிக்க
ஆலயம் செல்கையில்,
ஒருவர்
"எப்படி இருக்க?"
மற்றொருவர்
"எங்கே இருக்க?"
இன்னொருவரோ
"பார்க்கவே முடியலையே!"
இன்னும் நன்கு
அறிந்த நண்பர்
ஒருவர் பழைய
நல்ல நினைவுகளை
ஞாபகப்படுத்த,
நானும் அறிந்த முகங்களைப்
பார்த்துப் புன்முறுவல் செய்ய...
அட,
நானும் உள்ளூர்க்காரன் என
நிரூபணம் ஆனதால்
மகிழ்ச்சி கூத்தாடியது
மனது.

****



மாறிப்போன
கொஞ்சமும் நிறையவும்
முன்னர்
சிறிய
கஷ்டத்துக்கும், சவால்களுக்கும்,
வெற்றிக்கும், பாராட்டுக்கும்
உறவிடத்திலும் தோழியிடத்தும்
மட்டுமின்றிப்
பேசுபவர்களிடத்தில் எல்லாம்
புலம்பலும் ஆர்ப்பாட்டமாய்
இருந்த காலம் போய்,
இப்போ
கொஞ்சமாய் நெருக்கமானவர்களிடத்திலும்,
நிறையவாய் உள்ளுக்குள்ளே
இழப்பையும் மகிழ்ச்சியையும்
பேசுவது...
காரணமாய் வயது அதிகரிப்பா?
இல்லை,
காலப்போக்கில் பார்த்தவை, படித்தவை,
கேட்டவை, பட்டறிவு,
யோசித்தது என
மனப்பக்குவமா?

கட்டுரை



ஒரு மனிதன் எவ்வளவுதான் சத்தான உணவை உட்கொண்டாலும், அவனது மனநலம் ஆரோக்கியமாக இல்லை என்றால், உடல் சார்ந்தும் மனம் சார்ந்தும் பல சிக்கல்களை அவன் எதிர்கொள்ள நேரிடும். "சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும்" என்பார்கள்; ஆனால், அந்தச் சுவரையே தாங்கிப் பிடிக்கும் அஸ்திவாரம் தான் மனிதனின் மனநலம். நிமிடத்திற்கு நிமிடம் கட்டுக்கடங்காமல் ஓடும் எண்ணங்களும், மனதை வறுத்து எடுக்கும் சிந்தனைகளும் இன்று பலரின் அன்றாட அமைதியைப் பறித்துவிடுகின்றன.

மனதை ஆரோக்கியமாக வைப்பதற்குப் பல வழிகள் இருந்தாலும், பலருடைய மன அமைதியை முற்றிலுமாகச் சிதைக்கும் ஒரு முக்கியமான மன உளைச்சல் உண்டு. அதுதான், நிகழ்ந்து மறைந்த ஒரு சம்பவத்தில் தன் மீது எந்தத் தவறும் இல்லாதபோதும், எதிராளி தன் தவறை மறைப்பதற்காக நம் மீது பழி போடும்போது நமக்குள்ளே உருவாகும் 'போலி குற்ற உணர்ச்சி' (False Guilt / Emotional Gaslighting). நாம் எந்தத் தவறும் செய்யவில்லை என்பது நமக்குத் தெரிந்திருந்தாலும், சம்பந்தப்பட்ட நபர் ஆணித்தரமாக நம்மையே குற்றவாளியாகச் சித்திரிக்க முற்படும் போது, "ஒருவேளை நாம் தான் தவறு செய்துவிட்டோமோ?" என்று நம் மனமே நம்மை சந்தேகிக்கத் தொடங்குகின்றது. இந்தச் சுயசந்தேகம் (Self-doubt) மனதை உள்ளிருந்து கீறிக்கிழிக்கும் ஆறாத வடுவாக மாறி, மனிதனுக்குப் பெரிய உளவியல் மற்றும் உடல்சார்ந்த நோய்கள் தோன்ற அஸ்திவாரமாக அமைந்து விடுகின்றது.

இந்த மன உளைச்சலில் இருந்து மீண்டு, மனதை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள சில முக்கியமான தற்காப்பு அணுகுமுறைகள் அவசியமாகின்றன. முதலாவதாக, உங்களை நீங்களே சந்தேகிக்கத் தொடங்கும் முன், எதிராளியின் சுயநலமான வாதங்களால் உங்கள் மனசாட்சியைத் தளர விடாதீர்கள். "நான் தவறு செய்யவில்லை" என்ற உண்மை உங்களுக்குத் தெளிவாகத் தெரிந்தால், பிறரின் தவறான பிம்பங்களை ஏற்றுக்கொள்வதைத் தவிர்க்க முனையுங்கள். ஆரம்பத்தில் இது கடினமாகத் தோன்றினாலும்,

கவிஞர் ரஸ்னா ரம்ஸான், அக்குறணை (இலங்கை)

காலப்போக்கில் வீண் குற்றச்சாட்டுகளிலிருந்து உங்களை நீங்களே தற்காத்துக் கொள்ளும் வலிமை பிறக்கும்.

அடுத்து மிக முக்கியமானது, எல்லைகளை நிர்ணயிப்பது (Boundaries). அதாவது, பிறர் தன் தவறுகளை உங்கள் மீது சுமத்த அனுமதிக்காதீர்கள். அமைதியாக, ஆனால் உறுதியாக உங்கள் நியாயத்தில் நிலைத்து நில்லுங்கள்; அப்படியும் அவர்கள் சுயநலமாகவே நடந்து கொண்டால், அவர்களுடன் தேவையின்றி வாதிடாமல் மௌனமாக விலகிவிடுங்கள். மேலும், நிமிடத்திற்கு நிமிடம் ஓடும் சிந்தனைகளுக்கு உடனடியாக உணர்ச்சிவசப்பட்டு எதிர்வினை ஆற்றாமல் (React), ஒரு பார்வையாளராக அவற்றை அணுகப் பழகுங்கள் நீங்கள் உடனடியாக உணர்ச்சிவசப்பட்டால், உங்கள் அந்த பலவீனத்தை அவர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வார்கள்.

இதற்கென்று ஒரே அடியில் தீர்க்கக்கூடிய நேரடித் தீர்வுகள் இல்லையென்றாலும், நீங்கள் நினைத்தால் நிதானமாக இதிலிருந்து விடுபட முடியும். மனதைக் குடையும் குழப்பங்களை ஒரு தாளில் எழுதிப் பாருங்கள்; அது உங்கள் மூளையின் பாரத்தைக் குறைத்து, சில நேரங்களில் தெளிவான தீர்வையும் வெளிப்படுத்தும். எல்லோர் பார்வையிலும் நாம் நல்லவராக வாழ வேண்டிய அவசியமில்லை; நம் மனசாட்சிக்கு உண்மையாகவும் நேர்மையாகவும் வாழ்ந்தாலே போதுமானது. பிறரின் தந்திரமான பேச்சுகளால் பிறக்கும் போலி குற்ற உணர்ச்சியைத் தூக்கி எறிந்து, நம் மன அமைதியைப் பாதுகாப்பதே உண்மையான மன ஆரோக்கியம்.



கவிஞர் ரஸ்னா ரம்ஸான், அக்குறணை (இலங்கை)



கொஞ்சும் கனவுகளை,இணைத்த 21.ம் நூற்றாண்டிற்கு ஏற்ற முறையில், சிறுகதைச் செம்மல்,இரஜகை நிலவன். ஒரு அழகான சிறுகதைக்களம் அமைத்துள்ளார். மறுமலர்ச்சி, கருத்துக்கள், மலரும் நினைவுகள், புத்துயிர் ஓட்டமாக, எளிய நடையில் இனிய நிகழ்வுகளுடன் பொங்கி வரும் வெள்ளமென, கனவுகளுடன், கதைக்களம் அமைத்துள்ளார்.

23 கதைகள் உள்ளன அத்தனையும் முத்துக்கள்.இயற்கை, காதல், வீரம், ச மூகம், விருப்பம், இன்பம், துன்பம், சீர்திருத்தம், புரட்சி, ஞானம், விஞ்ஞானம், மெஞ்ஞானம், அனைத்தும் நிரம்பிய கதைக் கருக்கள், இதில் பேசப்படாத சுவைகள் இல்லை. பெரும்பாலும் வெளி நாட்டு மக்கள், சூழ்நிலைகளையும் , ஊர்களையும், தெருக்களையும், இயல்பாக காட்சிப்படுத்தி இருப்பது கதாசிரியர் உலகளாவிய நாடுகளுடன் இணைந்து வாழ்ந்தவர் என்பது அறியமுடிகிறது,

தமிழுக்கு ஆதரவளித்து மராத்திய மாநில தமிழ் எழுத்தாளர் மன்றம் வெளியீடு செய்திருப்பது, சிறப்பு.

இவர்ஒருநல்ல கவிஞர் என்று அறிவேன், சிறந்த கதாசிரியர் என்றும் புரிந்துகொண்டதில் மகிழ்ச்சி. சிந்தைனச் சிற்பி. சிறுகதை செம்மல் என்று நன்கு உணரமுடிகிறது.

திசைகள் மாறாமல், கலாச்சாரம் அழியாமல் வரை முறைக்குட் பட்ட கதைகள், ஆபாசங்கள் இல்லாமல் குடும்பச் சுமைகளை எடுத்துக் காட்டி, காதலை அன்பை, காட்டியுள்ளார்.முதல் கதையில் உறவுகளின் வலியைக் காட்டி உள்ளார், இறுதி வரை அந்த கட்டில் இருந்து பிசகாமல், அழகிய களமைத்து இறுதியிலும் வசந்தங்கள் வரும் நேரம் என்று முடித்துள்ளார்.

எனக்கு மிகவும் பிடித்து போன கதை,*கனத்துப் போன இதயங்கள்* என்ற கதை உண்மையில், இதயத்தை தொட்டது. அதே சமயம் கஷ்டங்களை

அனுபவித்துக் கொண்டு வேலை செய்யும் இந்தியனின் நிலைமை கண்ணீர்வரவழைத்தது.

இன்பம்.பயந்து இனிமை சொரிந்து
துன்பம் விலக்கி தூய்மை வளர்த்து
அன்பைப் பெருக்கி அளவிற்பெருகி
இன்பமாய் எழுந்துள்ள..

இந்த* " கொஞ்சும் கனவுகளோடு . நான் ''புத்தகம் ஒரு சிறந்த படைப்பு.





ஞானக்கூத்தன் (ஆர்.ரங்கநாதன்) (7 அக்டோபர் 1938- 27 ஜூலை 2016)) தமிழ் நவீனக் கவிஞர். கவிதைக் கோட்பாடு, கவிதை விமர்சனம் என முழுமையாகவே கவிதை சார்ந்து செயல்பட்டவர். பகடியும் அங்கதமும் கொண்ட கவிதைகளுக்காக அறியப்பட்டவர். கசடதபற என்னும் இலக்கிய இதழுடன் தொடர்புகொண்டு செயல்பட்டார்.

பிறப்பு, கல்வி:

ஞானக்கூத்தனின் இயற்பெயர் ஆர்.ரங்கநாதன். 7 அக்டோபர் 1938-ல் பழைய தஞ்சாவூர் மாவட்டம் மாயவரம் அருகே உள்ள திருஇந்தளூர் என்னும் இடத்தில் ராமராவ் - சாவித்ரி இணையருக்கு பிறந்தார்.

தனிவாழ்க்கை:

ஞானக்கூத்தன் ஆரம்பப்பள்ளி ஆசிரியராகவும், சிறப்புப் பணி ஆய்வாளராகவும் பணியாற்றினார். பின்னர் தமிழகப் பொதுப்பணித்துறை ஊழியராக பணியில் சேர்ந்தார்.

ஞானக்கூத்தன் ஜூலை 3, 1972-ல் கும்பகோணத்தில் சரோஜாவை திருமணம் செய்துகொண்டார். ஞானக்கூத்தனுக்கு இரண்டு மகன்கள். திவாகர் ரங்கநாதன் இதழாளர், இன்னொருவர் சிங்கப்பூரில் வசிக்கிறார்.

அரசியல் வாழ்க்கை:

ஞானக்கூத்தன் 1959 ஜூன் மாதம் முதல் ஆங்கில நாளிதழ்களை வாசிக்க

அரசியல் வாழ்க்கை:

ஞானக்கூத்தன் 1959 ஜூன் மாதம் முதல் ஆங்கில நாளிதழ்களை வாசிக்க ஆரம்பித்ததாகச் சொல்கிறார். அவருக்கு தொடக்கத்தில் ம.பொ.சிவஞானம் நடத்திவந்த தமிழரசுக் கழகத்தில் ஈடுபாடு இருந்தது. அவ்வமைப்பின் நிகழ்ச்சிகளிலும் போராட்டங்களிலும் கலந்துகொண்டார். பின்னர் அரசியல் செயல்பாடுகளில் இருந்து ஒதுங்கினார்.

இதழியல்:

கசடதபற;

1970 முதல் வெளிவந்த கசடதபற சிற்றிதழின் குழுவில் ஞானக்கூத்தனும் இருந்தார். அதன் முதல் இதழில் தமிழை எங்கே நிறுத்தலாம் என்னும் ஞானக்கூத்தனின் கவிதை வெளிவந்தது. நா.கிருஷ்ணமூர்த்தி ஆசிரியராக இருந்தார். ஞானக்கூத்தன், க்ரியா ராமகிருஷ்ணன், சா.கந்தசாமி ஆகியோர் அதில் பணியாற்றினர்

ழ

1978 முதல் ஆத்மாநாம் ஆசிரியராக இருந்து வெளிவந்த ழ என்ற கவிதைக்கான இதழில் ஞானக்கூத்தன் முதன்மைப்பங்காற்றினார். அதில் கவிதைகளுடன் கவிதை பற்றிய குறிப்புகளையும் மொழியாக்கங்களையும் எழுதினார். ஆத்மாநாம் தற்கொலைசெய்துகொண்டபின் மேலும் ஓர் இதழ் ஞானக்கூத்தன் பொறுப்பில் வெளிவந்தது

கவனம்;

1981-ல் கவனம் என்னும் சிற்றிதழ் ஞானக்கூத்தன் ஆசிரியத்துவத்தில் வெளிவந்தது. 1982-ல் ஏழு இதழ்கள் வெளிவந்தபின் அவ்விதழ் நின்றது.

கவனம்;

1981-ல் கவனம் என்னும் சிற்றிதழ் ஞானக்கூத்தன் ஆசிரியத்துவத்தில் வெளிவந்தது. 1982-ல் ஏழு இதழ்கள் வெளிவந்தபின் அவ்விதழ் நின்றது. அதில் ஞானக்கூத்தனுடன் ஆர்.ராஜகோபாலனும் முதன்மைப்பங்காற்றினார்.

நவீன விருட்சம்;



அழகியசிங்கரை ஆசிரியராகக் கொண்ட நவீன விருட்சம் இதழ் 1988 முதல் வெளிவந்தது. அதில் ஞானக்கூத்தன் எல்லா இதழ்களிலும் பங்காற்றியதாக அழகியசிங்கர் குறிப்பிடுகிறார்.

இலக்கியவாழ்க்கை;

புலவர் கீரன் என அறியப்பட்ட கே.வி.வைத்யநாத சாமி ஞானக்கூத்தனின் பள்ளியில் மூத்த மாணவர். ஆறாம் வகுப்பில் ஆசிரியரான ஸ்ரீநிவாச ஐயங்கார் தமிழ்க்கவிதையில் ஈடுபாடு கொண்டவர். அவர்களிடமிருந்து இலக்கிய ஆர்வத்தை பெற்றார். பிரசங்கபூஷணம் என அறியப்பட்ட வரதராஜ ஐயங்கார் என்பவரின் சொற்பொழிவிலிருந்து மரபிலக்கியம் மீதான ஆர்வம் கொண்டு கவிதைகளை பள்ளிப்பருவத்திலேயே எழுதினார். ஞானக்கூத்தன் திருமந்திர ஈடுபாட்டால் ஞானக்கூத்தன் என்னும் பெயரைச் சூட்டிக்கொண்டார். 1956-ல் வெளிவந்த தோத்திரப்பாடல் அவருடைய முதல் படைப்பு. தொடக்கத்தில் மரபுக்கவிதைகள் எழுதிக்கொண்டிருந்த ஞானக்கூத்தன் புதுக்கவிதை மற்றும் நவீன இலக்கியத்தின் மீது எதிர்மனநிலை கொண்டிருந்தார். பின்னர் நவீன இலக்கியத்துக்குள் வந்து புதுக்கவிதைகள் எழுதியபோதும்கூட மரபுக்கவிதையின் சந்தம் மீது ஆர்வம் கொண்டிருந்தார்.

கவிதைகள்;

ஞானக்கூத்தன் நேரடியான பகடியும், நுட்பமான அங்கதமும் கொண்ட கவிதைகளை எழுதியிருக்கிறார். அன்று வேறு கிழமை என்னும் அவருடைய கவிதைத் தொகுதி 1973, ஆகஸ்டில் இலக்கியச் சங்கம் வெளியீடாக கே. எம் ஆதிமூலம் பாஸ்கரன், சிதம்பர கிருஷ்ணன், வரதராஜன், தட்சிணாமூர்த்தி, பி. கிருஷ்ணமூர்த்திகோட்டோவியங்களுடன் பிரசுரமாகியது. தமிழில் உள்ளடக்கம், வடிவமைப்பு இரண்டுக்காகவும் புகழ்பெற்ற தொகுப்பு இது. அதிலுள்ள அன்று வேறு கிழமை, தேரோட்டம், காலவழுவமைதி போன்ற கவிதைகள் பெரிதும் பேசப்பட்டவை.

தமிழ் நவீனக்கவிதை அந்தரங்கக் குறிப்புகளாக இருந்த சூழலில் இந்த பலகுரல்தன்மையும், படர்க்கைத் தன்மையும் ஞானக்கூத்தன் கவிதைகளுக்கு தனித்தன்மையை அளித்தன.

கதை;



ஞானக்கூத்தன் கண்ணீர்ப்புகை என்னும் ஒரே ஒரு சிறுகதை எழுதியிருக்கிறார். கவனம் இதழில் 1981-ல் இக்கதை வெளிவந்தது

கவிதையியல்;

ஞானக்கூத்தன் சம்ஸ்கிருதக் கவிதையியலில் ஆர்வம் கொண்டிருந்தார். தன் வாழ்க்கையின் கடைசிநாட்களில் சம்ஸ்கிருதக் கவிதை இயலை அடிப்படையாகக்கொண்டு தமிழ் நவீனக்கவிதைகளை மதிப்பிடும் கட்டுரைகளை எழுதினார்.

விருதுகள்;

2003 கவிதைக்கணம் விருது
2006 விளக்கு விருது
2006 புதுமைப்பித்தன் விருது
2009 விடியல் பாரதி விருது
2010 சாரல் விருது
2014 விஷ்ணுபுரம் இலக்கிய விருது

இலக்கிய இடம்;

தமிழ்ப் புதுக்கவிதையில் பகடியும் அங்கதமும் புதுமைப்பித்தன், சி.மணி ஆகியோரால் முன்னரே அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. ஞானக்கூத்தன் அதை அடுத்தகட்டத்திற்குக் கொண்டுசென்றார். மரபின் சந்தநயம் கொண்ட பகடிக்கவிதைகள் வழியாக தமிழில் ஒரு புதியபாதையை அவர் உருவாக்கினார். நவீனத்துவக் காலக் கவிதையின் இறுக்கம், தனிநபர் நோக்கு, அகவயப்பார்வை ஆகியவை இல்லாத அவருடைய கவிதைகள் தனித்து ஒலித்தன. நவீனத்துவம் மறைந்த பின்னர் உருவான கவிஞர்களிடம் ஞானக்கூத்தன் பெருந்தாக்கத்தைச் செலுத்தினார்.

மறைவு

ஞானக்கூத்தன் ஜூலை 27, 2016-ல் மறைந்தார்.



நாளை நமதே

பொறுத்தது போதும்

சிந்தித்து தொடங்கு

ஒரே நாளில்

உயர்ந்து விட முடியாது

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே



முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே தூலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலைலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை



தொடர்புக்கு :

9597887847
8870884969

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com